# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - OCTOBER 2019

மலர்: 13 இதழ்: 3 டிசம்பர் 2019 விலை: ரூ. 10

## நேரடியாக சொர்க்கத்தில் போட்டால் குறைந்தா போய்விடும்?

## மனித இனம் பூமிக்கு வந்த வரலாறு



- கூடவே வந்த ஷைத்தான்!
- பரீட்சையே வாழ்க்கை என்பதை ஏற்காதோருக்கு இழப்பே!
- உலகமெனும் பரீட்சைக் கூடத்தின் இயல்புகள்
- முகநூல் கருத்துப் பரிமாற்றம்



- அந்நியனின் கருவை அநியாயமாக கற்பத்தில் சுமந்தார்கள் அந்த அபலைகள்...

- சுமந்த கருவை கொன்றொழிக்க மருத்துவ மனைகளுக்கு இரசியமாகச் சென்றார்கள்..

- அனுபவித்த வேதனைகளை உள்ளுக்குள் புதைத்து மூடினார்கள்..

- அரவணைத்திருந்த பெற்றோர்கள் அவர்களை வீடுகளை விட்டுத் துரத்தினார்கள்...

- கருவைப் புதைத்த காமுகர்கள் காணாத தூரம் போனார்கள்...

- அனைத்தையும் மீறிப் பிறந்தவற்றை தந்தைகளின்றி வளர்க்கும் நிலைக்கு ஆளானார்கள்...

உடல் ரீதியாக அனுபவிக்கும் வலிகளுக்கும் மன உளைச்சலுக்கும் அப்பால் சமூகத்தின் ஏச்சும் பேச்சும், அவமானமும் இவர்களை அலைகழித்தது...

- மன உளைச்சல், கண்ணீர், விரக்தி, நிராசை, தற்கொலை என அனைத்தும் அரங்கேறின...

- இன்னும் அன்றாடம் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றன...

**... எல்லாம் எதனால்?**

- பெண்ணுரிமை, பெண்விடுதலை, பெண்ணியம் என்று கூறி ஆணாதிக்க வஞ்சகர்கள் விரித்த வலையில் அநியாயமாக அகப்பட்ட காரணத்தால்!

- பெண்களின் உடலை விளம்பர மற்றும் வியாபாரச் சரக்காக்கி தங்கள் சுயநல வக்கிரங்களை தீர்த்துக் கொள்ளும் ஆண்களும் அதற்கு துணைபோகும் பெண்களும் பெண்ணடிமைத்தனத்தையே வளர்த்து வந்துள்ளார்கள் என்பதே உண்மை!

-பெண்ணியம் என்ற பெயரில் உடைகளைக் களைவதுதான் பெண்விடுதலை என்ற மாயையை உண்டாக்கி பெரும்பாலானோரை அவர்கள் வழிகெடுக்கச் செய்தனர்.

-பாலியல் வல்லுறவுகளுக்கு ஆளானோருக்கு ஆதரவாகக் குரல்கொடுக்க ஆட்களும் ஊடகங்களும் திரண்டு வருவதை நாம் காண முடிகிறது.

- ஆனால் இந்த வஞ்சக வலையில் வீழ்ந்ததன் காரணமாக நரக வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் அபலைகளுக்கு ஆதரவாக வருவோர் யாரும் இல்லை... ஏன், அந்தப் பெண்ணுரிமை வாதிகளும் கூட வருவதில்லை...

### இஸ்லாம் என்ற வரப்பிரசாதம்:

ஆனால் உண்மையில் பெண்ணை இந்த ஆணாதிக்கத்தின் உச்சகட்டக் கொடுமையில் இருந்து காப்பாற்ற அவளைப் படைத்த அவளது உணர்வுகளை நன்கறிந்த அவளது நலனில் பேரார்வம் கொண்ட அவளது இரட்சகன் அவளுக்கு பரிந்துரைக்கும் பாதுகாப்புக் கவசமே ஹிஜாப் என்ற ஆடை ஒழுக்கம்!

பெண்ணுக்கு வழங்கப்படும் இந்த பாதுகாப்பு முழு சமூகத்தையும் பாதுகாக்கும் அரணாக அமைகிறது என்பதை சிந்திப்போர் அறியலாம்!

’நபியே! உம் மனைவியர்க்கும் உம் புதல்வியர்க்கும் இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் அவர்கள் தம் முக்காடுகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக !அவர்கள் (கண்ணியத்திற்கு உரியவர்களாக) அறியப்படுவதற்கும் (பிறரின்) தொல்லைக்கு உள்ளாகமலிருப்பதற்கும் இது ஏற்றதாகும்’ (அல்குர்ஆன் 33.59)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 13 இதழ்: 3 டிசம்பர் 2019 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

மனித இனம் பூமிக்கு வந்த வரலாறு -2
மறுமை நாளில் பயனளிக்கும் நற்குணம் -7
கூடவே வந்த ஷைத்தான்! -8
ஷைத்தானில் இருந்து தற்காத்துக் கொள்ளுங்கள்! -10
பரீட்சையே வாழ்க்கை என்பதை ஏற்காதோருக்கு இழப்பே! -12
நேரடியாக சொர்க்கத்தில் போட்டால் குறைந்தா போய்விடும்? -14
நபிகளாரின் முதுகில் ஈச்சங்கயிற்றின் சுவடு! -16
உலகமெனும் பரீட்சைக் கூடத்தின் இயல்புகள் -17
இப்படியும் சோதனைகள் வருவதுண்டு! -18
சோதனைதான் வாழ்க்கை என்று புரிந்துகொள் மனமே! -19
கொடுங்கோல் அரசனுக்கு முன் துணிச்சல் -20
நபிகளாரை விரட்டிய பெண்மணி -21
முகநூல் கருத்துப் பரிமாற்றம் -20

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.com www.waytoparadise.in**

# மனித இனம் பூமிக்கு வந்த வரலாறு

## நம்பத்தகுந்த வரலாறு எங்கு கிடைக்கும்?



மனிதஇனம் இந்த பூமிக்கு வந்ததன் பின்னால் கண்டிப்பாக ஒரு வரலாறு இருக்க வேண்டும். பகுத்தறிவு பூர்வமாக சிந்தித்தால் உண்மை என்ன என்பதை நாம் ஊகித்துதான் அறிய முடியும். ஏனெனில் நாம் அப்போது இருக்கவில்லை. இந்த விஷயத்தில் அறிவியல் ஆராய்ச்சிகள் ஏதும் சொல்வதாக இல்லை. வேறு யார் எதைக் கூறினாலும் அவை உறுதியற்ற ஊகங்களாகவே அமையும். இந்நிலையில் இவ்வுலகையும் மனிதர்களையும் இன்னபிற ஜீவிகளையும் படைத்தவன் எவனோ அவன் நமக்கு எதைச் சொல்கிறானோ அது மட்டுமே உண்மையாக இருக்க வாய்ப்புள்ளது.

அந்த வகையில் நாம் பூமிக்கு வந்த வரலாற்றை இன்று உறுதியான முறையில் அறிய நமக்குத் துணை நிற்பது இறுதிவேதம் திருக்குர்ஆனும் இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி அவர்களின் கூற்றுக்கள் மட்டுமே. அதற்கான சில முக்கிய காரணங்கள் உள்ளன:

- இறைவனிடமிருந்து அவனது இறுதித்தூதர் முஹம்மது நபி அவர்கள் மூலமாக வந்த திருக்குர்ஆன் பதினான்கு நூற்றாண்டுகள் ஆகியும் மூல மொழியிலேயே உலகெங்கும் ஒரே போல பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- இலட்சக்கணக்கான மக்களால் மூலமொழியிலேயே அந்த வசனங்கள் மனப்பாடமும் செய்யப்பட்டு உள்ளதால் எந்த ஒரு மாற்றங்களுக்கும் அது இரையாவதில்லை.
- நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மைகளோடும் வரலாற்று உண்மைகளோடும் அற்புதமான முறையில் பொருந்திப் போகிறது.




- அரபு மொழியில் அதன் உயர்ந்த இலக்கியத் தரம், அதன் தீர்க்கதரிசனங்கள் மெய்ப்பிக்கப்பட்டு வருதல், வசனங்களின் முரண்பாடின்மை, அறிவியல் வளர்ச்சியால் புதிதுபுதிதாக கண்டுபிடிக்கப்படும் நிரூபிக்கப்பட்ட உண்மைகளோடு முரண்படாமை இன்னும் இவைபோன்ற பல அற்புத குணங்களால் திருக்குர்ஆன் தன்னை ஒரு முழுமையான நம்பத்தகுந்த இறைவேதம் என்பதை நிரூபித்து வருகிறது.

## நமது பின்னணியை அறியும் முன்..

இறைவேதம் திருக்குர்ஆன் மூலம் நமக்கு அறியக் கிடைக்கும் பூமியில் நமது தோற்றத்தின் வரலாற்று சுருக்கத்தினை நாம் கீழே காண இருக்கிறோம். இது தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் புரிந்து கொள்வதற்கு முன்னால் வாசகர்களாகிய நாம் நமது நிலையைப் பற்றி சற்று நினைவுகூர வேண்டும்:

## மனிதனின் அற்ப நிலை




● இம்மாபெரும் பிரபஞ்சத்தில் பரவிக்கிடக்கும் கோடானுகோடி பந்துகளில் ஒரு பந்தான பூமிப் பந்தின்மீது ஒட்டிக்கொண்டு இருக்கும் ஒரு நுண்ணிய துகள் போன்றவர்கள் நாம். நம்மில் ஒவ்வொருவரது ஆயுளும் நீர்க்குமிழி போல மிகமிக அற்பமானதே. ஒரு அற்பமான இந்திரியத்துளியிலிருந்து உடல் பெற்று உருவாகி வளர்ந்து மறையக் கூடியவர்கள் நாம்.

● இவற்றின் படைப்பிலோ இயக்கத்திலோ கட்டுப்பாட்டிலோ ஒரு துளியளவு கூட நம் பங்களிப்பு என்பது இல்லை. மட்டுமல்ல, நாம் நமது என்று சொல்லிக் கொள்ளும் நம் உடல் பொருள் ஆவி என இதில் எதுவுமே நமது அல்ல, இவற்றின் கட்டுப்பாடும் முழுமையாக நம் கைவசம் இல்லை.

● நாம் இங்கு வருவதும் போவதும் - அதாவது நம் பிறப்பும் இறப்பும் - நம் விருப்பப்படி நடப்பது அல்ல.

● மனித குலத்தின் ஒட்டு மொத்த அறிவு என்பது நமது முன்னோர்கள் இதுவரைத் திரட்டித்தந்தவை, மனிதகுலம் இதுவரை மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் விளைவாக பகுத்தறிந்தவை, மற்றும் அவர்கள் பகிர்ந்து கொண்டவை, நாம் சுயமாக ஐம்புலன்களின் வாயிலாக அறிந்த தகவல்களை வைத்து பகுத்தறிந்தவை என பலவும் அவற்றில் அடங்கும். இவை ஒட்டுமொத்தத்தையும் ஒரே இடத்தில் திரட்டினாலும் அது இப்பிரபஞ்சத்தைப் பற்றிய முழுமையான அறிவு என்று கூற சற்றும் வாய்ப்பே இல்லை. அறிந்தது துளியளவு அறியாதது கடலளவு என்பது கூட மிகைப்படுத்தப்பட்ட உண்மையே!

## திருக்குர்ஆன் வசனங்களின் இயல்பு

● அடுத்ததாக திருக்குர்ஆன் வசனங்கள் என்பவை இவ்வுலகைப் படைத்தவனால் அவனது பரந்த அறிவில் இருந்து பகிரப்படுபவை. இம்மாபெரும் பிரபஞ்சத்தில் அற்பமான தோற்றமும் அற்பமான ஆயுளும் கொண்ட மனிதர்களாகிய நமக்கு இந்தக் குறுகிய பரீட்சை வாழ்க்கைக்கு என்ன தேவையோ அதை மட்டுமே கூறுகிறான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மேலும் நமக்கு வாய்த்துள்ள அற்ப அறிவுக்கு எட்டாத பல விடயங்களும் இங்கு கூறப்படும் போது அவற்றை அவ்வாறே

ஏற்றுக்கொள்வதே அறிவுடைமை. மாறாக நமது அற்ப அறிவைக் கொண்டு இவ்வுலக நடைமுறையோடு ஒப்பிட்டு அவை அறிவுக்குப் பொருந்தாதவை என்று வாதிடுவது வாதியின் அறிவீனத்தையே பறைசாற்றும் என்பதை நாம் அறியவேண்டும்.

மீண்டும் நினைவு கூருவோம். கீழ்கண்ட நிகழ்வுகள் நமது அறிவு எல்லைக்கு அப்பால் நடந்தவை. நமக்குப் பழகிய நிகழ்வுகளோடு ஒப்பீடு செய்து அல்லது நமக்கு எட்டிய அற்ப அறிவைக் கொண்டு இவற்றை ஒப்பீடு செய்து அணுகினால் அது குழப்பத்தையே தரும்.

**பதங்கள் விளக்கம்:**

வாசகர்கள் அறிந்து கொள்வதற்காக கீழ்கண்ட வசனங்களில் இடம்பெறும் சில பதங்கள் பற்றிய சுருக்கமான விளக்கங்கள் வருமாறு:

**அல்லாஹ்**: இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் ஏக இறைவனைக் குறிக்கும் சொல். இதன் பொருள் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்பது.

**வானவர்கள் அல்லது மலக்குகள்** : வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள். (அரபு மொழியில் 'மலக்கு'கள் என்று வழங்கப்படும்) அவர்கள் ஆண்களுமல்ல பெண்களுமல்ல. அவர்கள் எப்போதும் இறைவனின் கட்டளைப்படியே நடப்பவர்கள். ஒருபோதும் அவனை மீறி நடக்கவோ மாறு செய்யவோ மாட்டார்கள். அவர்களுக்கு இடப்பட்ட கட்டளைகளை தவறாது செய்து முடிப்பார்கள்.

**ஜின்கள்:** மனிதர்களைப் போலவே பகுத்தறிவும் விருப்ப உரிமையும் கொடுக்கப்பட்ட இனம். நெருப்பின் சுவாலையில் இருந்து படைக்கப்பட்டவர்கள். மனிதர்களைப் போலவே ஆண் பெண் மற்றும் சந்தானங்கள், நல்லவர்கள் கெட்டவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மற்றும் அல்லாதவர்கள் என இவர்களுக்குள்ளும் உள்ளனர்.

- வானவர்கள் ஒளியினாலும், ஜின்கள் நெருப்பினாலும், ஆதம் (என்னும் முதல் மனிதர்) உங்களுக்கு விளக்கியவாறு (மண்ணினாலும்) படைக்கப்பட்டவர்கள்' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். (அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) நூல்: முஸ்லிம், அஹ்மத்)

**இப்லீஸ் மற்றும் ஷைத்தான்:**

ஷைத்தான்கள் என்பவை ஜின் இனத்தைச் சேர்ந்தவை. இப்லீஸ் என்ற நபரின் வழித்தோன்றல்கள் தான் ஷைத்தான்கள். இப்லீஸ் என்பவன் தனி நபர். அந்தத் தனிநபரின் மூலம் உருவான கெட்ட சந்ததிகள்தாம் ஷைத்தான்கள். மனித மற்றும் ஜின் இனத்தைச் சார்ந்தவர்களின் மனங்களில் ஊசலாட்டத்தையும் தீய எண்ணங்களை விதைப்பதற்கு சக்தி பெற்றவர்கள் ஷைத்தான்கள்.

**ஆதம்:** முதல் மனிதரின் பெயர்.

மேற்கூறப்பட்ட எந்த இனங்களும் மனிதனின் தற்போதைய நிலையில் அவனது கண்களுக்குப் புலப்படாதவை என்பதையும் அவை அனைத்தும் மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னரே படைக்கப்பட்டவை என்பதையும்

*நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதனைப் படைப்பதற்கு முன் நடந்த உரையாடலை நாம் கீழ்கண்டவாறு திருக்குர்ஆனில் காண்கிறோம்:*

### மனிதனின் படைப்புக்கு முன்னர்..

**2:30. (நபியே) இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி "நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்" என்று கூறியபோது, அவர்கள் "(இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப்போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்ததைப் போற்றியவர்களாக இருக்கின்றோம்" என்று கூறினார்கள். அ(தற்கு இறை)வன் "நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" எனக் கூறினான்.**



**2:31. இன்னும், (இறைவன்) எல்லாப் (பொருட்களின்) பெயர்களையும் ஆதமுக்கு கற்றுக் கொடுத்தான் பின் அவற்றை வானவர்கள் முன் எடுத்துக் காட்டி, "நீங்கள் (உங்கள் கூற்றில்) உண்மையாளர்களாயிருப் பின் இவற்றின் பெயர்களை எனக்கு விவரியுங்கள்" என்றான்.**

**2:32. அவர்கள் "(இறைவா!) நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக்கொடுத்தவை தவிர எதைப் பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை. நிச்சயமாக நீயே பேரறி வாளன் விவேகமிக்கோன்" எனக் கூறினார்கள்.**

**2:33. "ஆதமே! அப்பொருட்களின் பெயர்களை அவர்களுக்கு விவரிப்பீராக!" என்று (இறைவன்) சொன்னான் அவர் அப்பெயர்களை அவர்களுக்கு விவரித்தபோது "நிச்சயமாக நான் வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பவற்றை அறிவேன் என்றும், நீங்கள் வெளிப்படுத்துவதையும், நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பதையும் நான் அறிவேன் என்றும் உங்களிடம் நான் சொல்லவில்லையா?" என்று (இறைவன்) கூறினான்.**

**2:34. பின்னர் நாம் வானவர்களை நோக்கி, "ஆதமுக்குப் பணி(ந்து ஸுஜூது செய்)யுங்கள்" என்று சொன்னபோது இப்லீஸைத்தவிர மற்ற அனைவரும் சிரம் பணிந்தனர் அவன் (இப்லீஸ்) மறுத்தான் ஆணவமும் கொண்டான் இன்னும் அவன் சத்தியமறுப்பாளர்களைச் சார்ந்தவனாகி விட்டான்.**

*மேற்கண்ட வசனங்களில் இருந்து முதல் மனிதர் ஆதமுக்கு இறைவன் மற்ற இனங்களுக்கு வழங்காத அறிவை வழங்கி அவரை சிறப்பித்ததையும் அவருக்கு மரியாதை செய்யுமாறு மற்ற இனங்களை ஏவியதையும் இப்லீஸைத் தவிர மற்றவர்கள் யாவரும் சிரம் பணிந்ததையும் நாம் அறிகிறோம். வானவர்கள் எவ்வாறு மனிதர்கள் குழப்பம் விளைவிப்பவர்கள் அல்லது இரத்தம் சிந்துபவர்கள் என்பதை அறிந்து கொண்டார்கள் என்ற விடயம் நமக்குப் புதிராக இருக்கலாம்.*

*ஏற்கெனவே வாழ்ந்து கொண்டிருந்த ஜின் இனங்களின் செயல்பாடுகளைக் கண்டும் அவர்கள் அக்கேள்வி எழுப்பி இருக்கலாம். அல்லது வேறு ஏதாவது வழியில் இறைவனால் அவர்களுக்கு அதுபற்றிய அறிவு கொடுக்கப்பட்டு இருப்பதற்கும் வாய்ப்புண்டு. (இன்றுதான் ஒரு பொருளை தயாரிப்பதற்கு முன்னரே அதன் கம்ப்யுட்டர் ப்ரோடோடைப் செய்து அதைப் பற்றி கம்பெனிகள் விவாதிக்கும் முறையை அறிவோமே). இறைவனே மிக அறிந்தவன்.*

## சொர்க்கத்தில் குடியிருத்தல்

*தொடர்ந்து நடந்தவற்றை கீழ்கண்ட வசனங்களில் காண்கிறோம்.*

**7:19. (பின்பு இறைவன் ஆதமை நோக்கி:) "ஆதமே! நீரும், உம் மனைவியும் சுவர்க்கத்தில் குடியிருந்து, நீங்கள் இருவரும் உங்கள் விருப்பப் பிரகாரம் புசியுங்கள் ஆனால் இந்த மரத்தை (மட்டும்) நெருங்காதீர்கள் (அப்படிச் செய்தால்) நீங்கள் இருவரும் அநியாயம் செய்தவர்கள் ஆவீர்கள்" (என்று அல்லாஹ் கூறினான்).**

**7:20. எனினும் அவ்விருவருக்கும் மறைந்திருந்த அவர்களுடைய (உடலை) மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தும் பொருட்டு ஷைத்தான் அவ்விருவரின் உள்ளங்களில் (தவறான எண்ணங்களை) ஊசலாடச் செய்தான் (அவர்களை நோக்கி, "அதன் கனியை நீங்கள் புசித்தால்) நீங்கள் இருவரும் மலக்குகளாய் விடுவீர்கள், அல்லது (இச்சுவனபதியில்) என்றென்றும் தங்கிவிடுவீர்கள் என்பதற்காகவேயன்றி (வேறெதற்கும்,) இந்த மரத்தை விட்டும் உங்களை உங்கள் இறைவன் தடுக்கவில்லை" என்று கூறினான்.**

**7:21. "நிச்சயமாக நான் உங்களிருவருக்கும் நற்போதனை செய்பவனாக இருக்கிறேன்" என்று சத்தியம் செய்து கூறினான்.**

**7:22. இவ்வாறு, அவன் அவ்விருவரையும் ஏமாற்றி, அவர்கள் (தங்கள் நிலையிலிருந்து) கீழே இறங்கும்படிச் செய்தான் - அவர்களிருவரும் அம்மரத்தினை (அம்மரத்தின் கனியை)ச் சுவைத்தபோது - அவர்களுடைய வெட்கத்தலங்கள் அவர்களுக்கு வெளியாயிற்று அவர்கள் சுவனபதியின் இலைகளால் தங்களை மூடிக்கொள்ள முயன்றனர் (அப்போது) அவர்களை அவர்கள் இறைவன் கூப்பிட்டு: "உங்களிருவரையும் அம்மரத்தை விட்டும் நான் தடுக்கவில்லையா? நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் என்று நான் உங்களுக்கு சொல்லவில்லையா?" என்று கேட்டான்.**

*சொர்க்கத்தில் இறைவன் புசிக்க வேண்டாம் என்று தடுத்த கனியை ஷைத்தானின் தூண்டுதலால் புசித்த பின் தாங்கள் செய்த தவறை உணர்ந்தார்கள் நமது ஆதி தந்தையும் தாயும். பிறகு இறைவனிடம் பாவ மன்னிப்பு கோரினர். திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:*

**2:37. (பாவ மன்னிப்புக்குரிய) சில வார்த்தைகளை இறைவனிடமிருந்து ஆதம் பெற்றுக் கொண்டார். எனவே அவரை இறைவன் மன்னித்தான் அவன் மன்னிப்பை ஏற்பவன் நிகரற்ற அன்புடையோன்.**

*இறைவன் மன்னித்ததைத் தொடர்ந்து மனித இனம் பூமியில் குடியேற்றப்பட்டது. ஒரு தற்காலிகமான குறுகிய கால வாழ்க்கையை ஆதம் - ஹவ்வா தம்பதியினரும் அவர்களின் வழித்தோன்றல்களும் இங்கு கழிக்க இறைவன் பணித்தான்.*

**7:24,25 (அதற்கு இறைவன், “இதிலிருந்து) நீங்கள் இறங்குங்கள் - உங்களில் ஒருவர் மற்றவருக்குப் பகைவராயிருப்பீர்கள் உங்களுக்கு பூமியில் தங்குமிடம் இருக்கிறது அதில் ஒரு (குறிப்பிட்ட) காலம் வரை நீங்கள் சுகம் அனுபவித்தலும் உண்டு” என்று கூறினான். “அங்கேயே நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள் அங்கேயே நீங்கள் மரணமடைவீர்கள் (இறுதியாக) நீங்கள் அங்கிருந்தே எழுப்பப்படுவீர்கள்” என்றும் கூறினான்.**

பூமி வாழ்க்கையை ஒரு பரீட்சை வாழ்க்கையாக இறைவன் அமைத்துள்ளான். இதில் இறைவனின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப வாழ்பவர்கள் இந்தப் பரீட்சையில் வெல்கிறார்கள். அவர்கள் மீண்டும் சொர்க்கத்திற்குள் நுழைகிறார்கள். இறைவனையும் அவனது வழிகாட்டுதலையும் புறக்கணித்து வாழ்வோருக்கு நரகம் தண்டனையாக வழங்கப் படுகிறது.

**2:38. நாம் கூறினோம்: “நீங்கள் அனைவரும் இங்கிருந்து இறங்கி விடுங்கள். பிறகு உங்களுக்கு என்னிடமிருந்து நேர்வழி கிடைக்கும்போது யார் எனது நேர்வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்.**

**2:39. அன்றி யார் (அதை) ஏற்றுக்கொள்ள மறுத்து, எம்முடைய வசனங்களைப் பொய்யென்று கூறுகின்றார்களோ அவர்கள்தாம் நரகவாசிகளாவர் அவர்கள் அதிலேயே என்றென்றும் வீழ்ந்து கிடப்பார்கள்!”**

*இதுதான் நாம் பூமிக்கு வந்ததன் சுருக்கமான வரலாறு!*

# மறுமை நாளில் பயனளிக்கும் நற்குணம்

நற்குணத்தோடு இருக்கும் மனிதர்களுக்கு மறுமையில் கிடைக்கும் பரிசைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

● நபி (ஸல்) அவர்கள் ”நல்லொழுக்கத்தை விட மறுமையின் தராசில் வேறு எதுவும் கனமானதாக இருக்காது” என்றார்கள் (நூல்: திர்மிதி)

● ஒரு மனிதன் உண்மையான கருத்துடையவனாக இருந்தும் தர்க்கம் புரியாமல் இருந்து விடும்போது அம்மனிதனுக்கு சுவனத்தின் மூலைகளில் ஒரு வீட்டைப் பெற்றுத்தர நான் பொறுப்பேற்கின்றேன். வேடிக்கையாக பேசுபவனாயினும் பொய் பேசுவதைக் கை விட்டவனுக்கு சுவனத்தின் நடுவில் ஒரு வீட்டை பெற்றுத் தர நான் பொறுப்பேற்கின்றேன் தன் குணங்களை சிறப்பாக்கிக் கொண்டவனுக்கு சுவர்க்கத்தில் மிக உயர்ந்த பகுதியில் ஒரு வீட்டைப் பெற்றுத் தர பொறுப்பேற்கின்றேன்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நபித்தோழர் அபூ உமாமா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள், (நூல்: அபுதாவூத்).

நற்குணங்களை இயற்கையாகக் கொண்ட நபி (ஸல்) அவர்களே அதற்காக இறைவனிடம் பிராத்தித்துள்ளார்கள்.

● நபித்தோழர் இப்னு மஸ்ஊத்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபி (ஸல்) அவர்கள் ”என்னுடைய இரட்சகனே! என்னை அழகாக படைத்ததைப் போன்றே என்னுடைய ஒழுக்கத்தையும் அழகுப்படுத்துவாயாக” என்று பிராத்தித்தார்கள். (நூல்: இப்னு ஹிப்பான்)

# கூடவே வந்த ஷைத்தான்!

முதல் மனித ஜோடி இந்த பூமியில் வசிக்க ஆரம்பித்த போது அவர்களோடு கூடவே வந்தவர்கள் இப்லீசும் அவனது சந்ததியினரான ஷைத்தான்களும். திருக்குர்ஆன் இது பற்றிய வரலாற்று நிகழ்வுகளை பின்வருமாறு கூறுகிறது:

**7:11. நாம் உங்களைப் படைத்து, பிறகு உங்களுக்கு உருவம் கொடுத்தோம். பின்னர் ஆதமுக்கு சிரம் பணியுங்கள் என வானவர்களுக்குக் கட்டளையிட்டோம். (இக்கட்டளைக்கேற்ப) அவர்கள் அனைவரும் சிரம் பணிந்தார்கள். ஆனால் இப்லீஸைத் தவிர! அவன் சிரம் பணிவோரில் ஒருவனாய் இருக்கவில்லை.**

**7:12. "சிரம் பணியும்படி, நான் உனக்குக் கட்டளையிட்டபோது, அதைச் செய்யவிடாமல் உன்னைத் தடுத்தது எது?" என்று இறைவன் கேட்டான். அதற்கு இப்லீஸ் "நான் அவரை விட உயர்ந்தவன் நீ என்னை நெருப்பிலிருந்து படைத்தாய் அவரைக் களிமண்ணிலிருந்து படைத்தாய்" என்று பதில் கூறினான்.**

**7:13. அதற்கு அல்லாஹ் கூறினான்: "நீ இங்கிருந்து கீழே இறங்கி விடு இங்கு பெருமையடிக்க உனக்கு உரிமை கிடையாது நீ வெளியேறிவிடு! ஏனெனில், தமக்குத் தாமே இழிவைத் தேடிக் கொண்டவர்களில் திண்ணமாக நீயும் ஒருவனாகி விட்டாய்."**

**7:14. (இப்லீஸ் இவ்வாறு) வேண்டினான்: "இவர்கள் அனைவரும் திரும்ப எழுப்பப்படும் நாள் வரையிலும் எனக்கு அவகாசம் அளிப்பாயாக!"**

**7:15. அதற்கு "நீ அவகாசம் அளிக்கப்பட்டவர்களில் ஒருவனாவாய்!" என்று அல்லாஹ் கூறினான்.**

**7:16. அதற்கு இப்லீஸ் கூறினான்: "என்னை நீ வழிகேட்டில் ஆழ்த்திய காரணத்தால், திண்ணமாக, நானும் இம்மனிதர்களை உன்னுடைய நேரான வழியில் செல்லவிடாமல் தடுப்பதற்காக தருணம் பார்த்துக் கொண்டிருப்பேன்."**

மேற்படி ஒரு சம்பவத்தை முழு வீச்சில் நாம் புரிந்து கொள்ள இயலாவிடினும் இது உறுதியாக நடந்த ஒன்று என்பதை திருக்குர்ஆன் வசனங்களில் இருந்து அறியலாம்.

இந்த குறுகிய வாழ்வை ஒரு பரீட்சையாகவும் இந்த பூமியை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் இறைவன் படைத்துள்ளான் என்பதை முந்தைய கட்டுரையின் வாயிலாக நாம் அறிந்து கொண்டோம். இன்றைய நம் வாழ்க்கை, நாம் வாழும் இந்த பூமி, இம்மாபெரும் பிரபஞ்சத்தில் நம் அற்ப நிலை, நம் வாழ்க்கையின் நோக்கம் ஆகியவற்றை ஆராயும்போது பகுத்தறிவு பூர்வமாக ஆராயும் எவரும் இந்த ஒரு விடயத்தை உறுதியாக



உணர்வார்கள். இதை மறுப்பவர்களிடம் நீங்கள் இக்கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள்:

1. மனித இனம் இந்த பூமியில் தோன்றுவதற்கான பின்னணி என்ன?
2. மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன?
3. உங்கள் வாதத்திற்கு நீங்கள் முன்வைக்கும் ஆதாரம் என்ன?

கண்டிப்பாக அவர்களால் இதற்கான உறுதியான – பகுத்தறிவு பூர்வமான - பதிலை தரவே முடியாது. அவ்வாறு நீங்கள் பதில் பெற்றால் எங்களோடு அவற்றை பகிர்ந்து கொள்ளுங்கள்.

## மனிதனுக்கான பரீட்சையில் ஷைத்தானின் பங்கு

எந்த ஒரு பொருளையும் அதற்காக முயற்சி செய்து பெறும்போதுதான் அதன் அருமையை உணரமுடியும். மேலும் வெயிலில் சென்று கஷ்டப்பட்ட பின்தான் நிழலின் அருமை புரியும். தாகித்தவனுக்குத்தான் நீரின் அருமையும் புரியும். எந்த ஒரு உழைப்போ முயற்சியோ செய்யாமல் இலவசமாகக் கிடைத்த சொர்க்கம் என்ற அறிய பொக்கிஷத்தைப் பெற்றிருந்தார்கள் நம் ஆதி தந்தையும் தாயும் என்பதை முந்தைய கட்டுரையில் நாம் கண்டோம். அதே பொக்கிஷத்தை அதற்காக உழைத்து அதன்பின் பெறுவதற்காக இறைவன் செய்த ஏற்பாடாகவும் இந்தப் பரீட்சை வாழ்க்கை இருக்கலாம். இறைவனே மிக அறிந்தவன்.


● இங்கு நேர்வழி என்பது இறைவனின் தூதர்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் நமக்கு வருகிறது. இந்த பரீட்சைக்களத்தில் வெறும் நேர்வழி மட்டும் இருந்து அதற்கு எதிரான ஒன்று இல்லாவிட்டால் அந்தப் பரீட்சையில் அர்த்தம் இருக்காது. அதனால்தான் ை‘த்தான் என்ற ஒரு தீய சக்திக்கு இறைவன் அனுமதி கொடுத்து அவனுக்கு சில ஆற்றல்களையும் வழங்கி மனிதனை வழிகெடுக்க அனுமதியும் கொடுத்துள்ளதை நாம் காணமுடிகிறது. யார் அவனைப் பின்பற்றுகிறார்களோ அவன் உண்டாக்கும் சஞ்சலங்களுக்கு இரையாகின்றார்களோ அவர்கள் இந்தப் பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். மறுமையில் நரகத்தை அடைகிறார்கள். அதைப்பற்றி இறைவன் நமக்கு எச்சரிக்கவும் செய்துள்ளான்:

**● இறைவிசுவாசிகளே! ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள் இன்னும் எவன் ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறானோ அவனை தைத்தான் மானக் கேடானவற்றையும், வெறுக்கத்தக்க வற்றையும், (செய்ய) நிச்சயமாக ஏவுவான் ... (திருக்குர்ஆன் 24:21)**

**● ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்கள் பெற்றோர் இருவரையும், அவர்களுடைய மானத்தை அவர்கள் பார்க்குமாறு அவர்களுடைய ஆடையை அவர்களை விட்டும், களைந்து, சுவனபதியை விட்டு வெளியேற்றியது போல் அவன் உங்களை (ஏமாற்றிச்) சோதனைக்குள்ளாக்க வேண்டாம் நிச்சயமாக அவனும், அவன் கூட்டத்தாரும் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் - நீங்கள் அவர்களைப் பார்க்க முடியாதவாறு மெய்யாகவே நாம் ஷைத்தான்களை நம்பிக்கையில்லாதவரின் நண்பர்களாக்கி இருக்கிறோம்.**

# ஷைத்தானில் இருந்து தற்காத்துக் கொள்ளுங்கள்!

மனிதன் தீய நடத்தை உள்ளவனாக ஆவதற்கும் மனிதர்கள் பிறமனிதர்களை வெறுப்பதற்கும் பகைமை பாராட்டுவதற்கும் முக்கிய காரணம் நம் கண்ணுக்குப் புலப்படாமல் மனிதனுக்குள் ஊடுருவி உறைந்து கொண்டிருக்கும் ஷைத்தானே. இந்த பரீட்சை வாழ்க்கையை அமைதியாகக் கழிக்கவும் இந்தப் பரீட்சையில் வென்று சொர்க்கம் செல்லவும் வேண்டுமானால் இந்த விரோதியின் சூழ்ச்சிகளில் இருந்து நம்மை நாமே தற்காத்துக்கொள்ள முன்வரவேண்டும். திருமறைக் குர்ஆனில் இறைவன் நமக்கு போதிய எச்சரிகைகளைத் தந்துள்ளான்.



● *நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு எதிரியாக இருக்கின்றான். ஆகவே அவனை நீங்களும் எதிரியாகவே கருதுங்கள். அவன் (தனக்கு வழிப்பட்ட) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் நரகவாசிகளாகி விடுவதற்காகவே (திருக்குர்ஆன் 35:6)*

● *நம்பிக்கையாளர்களே! ஷைத்தானுடைய அடிச்சுவட்டை நீங்கள் பின்பற்றாதீர்கள். (ஏனென்றால்) எவன் ஷைத்தானுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்கிறானோ அவனை அவன் மானக்கேடான விஷயங்களையும், பாவமான காரியங்களையும் செய்யும்படி நிச்சயமாகத் தூண்டிக் கொண்டே இருப்பான். அல்லாஹ்வுடைய அருளும், கிருபையும் உங்கள் மீது இல்லாதிருப்பின் உங்களில் ஒருவருமே எக்காலத்திலும் பரிசுத்தவானாக இருக்க முடியாது. எனினும், அல்லாஹ் தான் நாடியவனைப் பரிசுத்தவானாக ஆக்குகிறான். அல்லாஹ் செவியுறுபவனும் (அனைத்தையும்) நன்கறிபவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 24:21)*

ஷைத்தானிடம் இருந்து பாதுகாப்பு பெறவும் நம்மை நாமே தூய்மைப் படுத்திக் கொள்ளவும் வேண்டுமானால் இறைவன் நமக்குத் தந்த வாழ்க்கை நெறியாம் இஸ்லாத்தை பலமாகப் பின்பற்றுமாறு இறைவன் நமக்குப் பணிக்கிறான்.

● *நம்பிக்கையாளர்களே! நீங்கள் (தயங்கிக் கொண்டிருக்க வேண்டாம்) இஸ்லாமில் முற்றிலும் நுழைந்து விடுங்கள். (இதனைத் தடை செய்யும்) ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான எதிரியாவான். (திருக்குர்ஆன் 2:208)*

இவ்வுலகில் நம்மை வழி கெடுப்பதற்காக நமக்குள் ஊசலாட்டங்களை ஏற்படுத்துபவன் ஷைத்தான். இறைவனின் சத்திய மார்க்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளை - பாவங்களை மேற்கொள்ளுமாறு நம்மைத்

தூண்டிக்கொண்டே இருப்பான். பொய்யான வாக்குறுதிகளையும் அளிப்பான்.

● (ஷைத்தான்) அவர்களுக்கு வாக்களிக்கின்றான். அவர்களுக்குப் பொய் நம்பிக்கையும் ஊட்டுகின்றான். எனினும் ஏமாற்றுவதற்கன்றி ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை. இத்தகையவர்கள் செல்லுமிடம் நரகம்தான். அவர்கள் அதிலிருந்து தப்ப யாதொரு வழியையும் காணமாட்டார்கள். (திருக்குர்ஆன் 4: 120,121)

● மதுவாலும் சூதாட்டத்தாலும் உங்களுக்கிடையில் பகைமையையும் பொறாமையையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் ஞாபகத்திலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவுமே நிச்சயமாக ஷைத்தான் விரும்புகிறான். (ஆகவே, அவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்வீர்களா? (மாட்டீர்களா?) (திருக்குர்ஆன் 5:91)

## நேர்வழியில் இருந்து மக்களை பிரளச்செய்வான்

இறைவன் தன் தூதர்கள் மூலமும் வேதங்கள் மூலமும் நேரான பாதைக்கு அழைத்துக்கொண்டு இருக்கும்போது அதில் செல்லவிடாமல் ஷைத்தான் தடுப்பான். மூதாதையர் வழி மீது மக்கள் கொள்ளும் கண்மூடித்தனமான நம்பிக்கையும் ஷைத்தானின் செயலே.

● அவர்களை நோக்கி அல்லாஹ் இறக்கிய (அல்குர்ஆனைப்) பின்பற்றுங்கள் எனக் கூறினால், அதற்கு அவர்கள் அன்று, எங்கள் மூதாதைகள் எதன்மீது இருக்க நாங்கள் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர். (என்னே!) அவர்கள் மூதாதைகளை ஷைத்தான் நரக வேதனையின் பக்கம் அழைத்து (அவர்களும் சென்று) இருந்தாலுமா? (இவர்கள் அவர்களைப் பின்பற்றிச் செல்வார்கள்!) (திருக்குர்ஆன் 31:21)

● நிச்சயமாக எவர்களுக்கு நேரான வழி இன்னதென்று தெளிவானதன் பின்னரும் அவர்கள் (அதன்மீது செல்லாது) தங்கள் பின்புறமே திரும்பிச் சென்றுவிட்டார்களோ, அவர்களை ஷைத்தான் மயக்கிவிட்டான். அன்றி, அவர்களுடைய தப்பெண்ணங்களையும் விரிவாக்கி, அவர்களுக்கு அவற்றை அழகாக்கியும் விட்டான். (திருக்குர்ஆன் 47:25)

## பாதுகாப்பை இறைவனிடமே கேளுங்கள்

● (நபியே!) ஷைத்தானுடைய யாதொரு ஊசலாட்டம் (தீய காரியங்களைச் செய்யும்படி) உங்களைத் தூண்டும் சமயத்தில் (உங்களை அதிலிருந்து) பாதுகாத்துக் கொள்ளும்படி அல்லாஹ்விடத்தில் நீங்கள் கோருவீராக! நிச்சயமாக அவன் (அனைத்தையும்) செவியுறுபவனும் நன்கறிபவனாகவும் இருக்கின்றான். (ஆதலால் அவன் உங்களை பாதுகாத்துக் கொள்வான்) (திருக்குர்ஆன் 41:36)

## பரம்பரை பரம்பரையாக வழிகெடுப்பவன்

● (நபியே!) அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உங்களுக்கு முன்னிருந்த பல வகுப்பார்களுக்கும் நாம் (நம்முடைய) தூதர்களை அனுப்பி வைத்தோம். எனினும், ஷைத்தான் அவர்களுக்கும் அவர்களுடைய (தீய) காரியங்களையே அழகாகக் காண்பித்தான். இன்றைய தினம் இவர்களுக்கும் அவனே நண்பனாக இருக்கிறான். ஆகவே இவர்களுக்கு மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு. (திருக்குர்ஆன் 16:63)

# பரீட்சையே வாழ்க்கை என்பதை ஏற்காதோருக்கு இழப்பே!

நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை ஒரு பரீட்சை என்று உணர்பவர்கள் அனாவசியமான மன உளைச்சல்களில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். வாழ்க்கையில் தோல்விகளையும் இழப்புகளையும் கண்டு துவண்டு போவதில்லை, தற்கொலைகளில் தஞ்சம் புகுவதில்லை. எந்த மாதிரியான சூழ்நிலைகள் எதிர்வந்தபோதும் சுதாரித்துக்கொண்டு முன்னேறுகிறார்கள். பள்ளிக் கூடங்களில் பயிற்றுவிக்கப்பட வேண்டிய அடிப்படை பாடங்களில் ஒன்று இது. ஆனால் பகுத்தறிவு என்ற பெயரில் அறவே நிரூபிக்கப்படாத அறிவியல் ஊகங்களைக் கோர்வையாக்கி படைத்தவனை மறுக்கும் பாடங்களைத்தான் இன்று கல்விக் கூடங்களில் போதிக்கிறார்கள். அதன் காரணமாக தன்னம்பிக்கை அறவே இல்லாத மாணவர்களாக பலர் வளர்கிறார்கள். சிலர் ஒன்றோ இரண்டோ மதிப்பெண் குறைந்தாலும் கூட தற்கொலைகளில் தஞ்சம் புகுவதையும் நாம் கண்டு வருகிறோம். இனியாவது உருப்படியாக பகுத்தறிவை பயன்படுத்தி நம் தலைமுறைகளைக் காக்க முயற்சிப்போம்.



வாழ்க்கை என்பது ஒரு பரீட்சையே என்பதை அறிந்து கொள்ள பெரும்பெரும் ஆராய்ச்சிகள் எதுவும் தேவையில்லை. ஆறடி மனிதர்களாகிய நமக்கு வழங்கப்பட்டுள்ள மிகமிக அற்பமான பகுத்தறிவு கொண்டு சிந்தித்தாலே அனைத்தும் விளங்கும். நாமாக நாம் இங்கு வரவில்லை என்பது உண்மை! நமது, நிறம், மொழி, நாடு, தாய், தந்தை, உறவுகள் இவை எவையும் நாமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அமைந்தவை அல்ல என்பதும் உண்மை!

நமது என்று நாம் சொல்லிக்கொள்ளும் உடல், பொருள், ஆவி என இவை எவையும் நமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதும் உண்மை! உடல் என்ற கூட்டுக்குள் நாம் வந்ததும் இதை விட்டுப் பிரிவதும் நம்மைக் கேட்டு நடப்பவை அல்ல என்பதையும் அறிவோம்.

ஒரு அற்ப இந்திரியத் துளியில் இருந்து தொடங்கி படிப்படியாக பல கட்டங்களைக் கடந்து கருவாக உருவாகி கருவறையில் சொகுசாக வளர்ந்து உரிய பக்குவம் அடைந்த பின் குழந்தையாக வெளிவந்து தொடர்கிறது நம் ஒவ்வொருவரதும் வாழ்க்கைப் பயணம்! ஆக, எதுவுமே நம் கட்டுப்பாட்டில் இல்லாதவை. இவற்றோடு இவற்றின் பின்னணியில் உள்ள இப்பிரபஞ்சத்தின் விசாலமும் நுட்பமும் குறையில்லா இயக்கமும் அதற்குப் பின் உள்ள பலவும் இவற்றைப் படைத்து பரிபாலித்து வருபவனின் வல்லமையையும் நுண்ணறிவையும் அதிபக்குவமான திட்டமிடுதலையும் பறைசாற்றி நிற்பதை நமக்கு உணர்த்தவில்லையா?.

*திருமறை குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:*

● **நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதிலும் இரவும்,பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும், மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமி இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும் அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்வதிலும் வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் - சிந்தித்துணரும் மக்களுக்கு சான்றுகள் உள்ளன. (திருக்குர்ஆன் 2:164)**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)*

## எதுவும் வீணுக்காக அல்ல!

இவ்வாறு இப்பிரபஞ்சம் முழுவதுமே நமக்காக இயங்கிக் கொண்டிருக்கும் போது நாம் வீணுக்காகப் படைக்கப் பட்டிருப்போமா? இதையே இறைவன் தன் இறுதிவேதமாம் திருக்குர்ஆனில் கேட்கிறான்:.

● **நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா? (திருக்குர்ஆன் 23:115)**

அவ்வாறு சிந்திக்கும்போது இவை எதுவும் வீணுக்காக அல்ல. ஒரு மகத்தான உறுதியான திட்டத்தின் கீழ்தான் நாம் படைக்கப் பட்டிருக்கிறோம் என்பது புலனாகும். இறைத்தூதர்களும் இறைவேதங்களும் நமக்கு எடுத்துச் சொல்வது உண்மை என்று புலப்படும். அந்த உண்மை என்னவெனில் இவ்வுலகை இறைவன் ஒரு பரீட்சைக்கூடமாகப் படைத்துள்ளான் என்பது. இதில் நமது செயல்கள் அனைத்தும் பதிவு செய்யப் படுகின்றன. யார் இறைவனுடைய கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு சொர்க்கம் என்ற நிரந்தர வசிப்பிடம் உண்டு. யார் கட்டுப் படாமல் தான்தோன்றித்தனமாக வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். அவர்களுக்கு நரகம் என்ற நிரந்தர வேதனைகள் கொண்ட வசிப்பிடம்தான் கிடைக்கும்.

இந்தப் பரீட்சைக் கூடத்திற்குள் நாம் அனைவரும் அவரவருக்கு விதிக்கப்பட்ட தவணையில் வந்து போகிறோம். இங்கு இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து செய்யப் படும் செயல்கள் நன்மைகளாகவும் கீழ்படியாமல் மாறாகச் செய்யப்படும் செயல்கள் தீமைகளாகவும் பதிவாகின்றன. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் நன்மைகள் அல்லது தீமைகள் செய்வதற்கு சுதந்திரமும் வாய்ப்பும் அளிக்கப்படும் இடமே இந்த தற்காலிகப் பரீட்சைக் கூடம்!.

● **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர், நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 21:35)**

# நேரடியாக சொர்க்கத்தில் போட்டால் குறைந்தா போய்விடும்?

“இறைவன் இவ்வுலக வாழ்வை ஒரு பரீட்சைக்களமாக அமைத்திருக்கிறான். இந்தப் பரீட்சையில் யார் அவனுக்குக் கீழ்ப்படிந்து தங்கள் ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தி வாழ்கின்றார்களோ அவர்களுக்குப் பரிசாக சொர்க்கத்தை அவன் வழங்க உள்ளான். யார் கீழ்ப்படியாமல் தான்தோன்றித்தனமாக வாழ்கின்றார்களோ அவர்களுக்கு நரகத்தை தண்டனையாக வழங்கவுள்ளான்.“ என்றெல்லாம் இறைத்தூதர்களும் இறைவேதங்களும் போதிப்பதை அறிவோம். இதை கேள்விப்படும்போது கீழ்கண்ட சந்தேகங்கள் மனிதர்களிடம் எழுவது இயல்பு.

சற்று சிந்தித்தால் இக்கேள்விகளுக்கான விடைகளை நாமே பெறலாம்.

## ஏன் பரீட்சிக்க வேண்டும்?

கேள்வி : இறைவன் ஏன் பரீட்சிக்க வேண்டும்? அவன்தான் அனைத்தையும் அறிபவனாயிற்றே... ~ குறிப்பாக முக்காலத்தையும் ~ அறியக்கூடிய அவன் நேரடியாகவே இன்ன மனிதன் பரீட்சையில் ஜெயிப்பானா அல்லது தோற்பானா என்பதை முன்கூட்டியே அறிய முடியுமே.. அந்த அடிப்படையில் அந்த மனிதனை சொர்க்கத்திலோ அல்லது நரகத்திலோ போடலாமே?



பதில்: அவ்வாறு செய்வதற்கு இறைவனுக்கு எந்த அடிப்படையும் தேவை இல்லை. அவன் விரும்பியதை செய்துகொள்ள யார் தயவும் தேவைப்படாதவன். அவன் அப்படி உங்களை சொர்க்கத்திலோ அல்லது நரகத்திலோ போட்டாலும் நீங்கள் திருப்பிக் கேட்கவும் முடியாது என்பதே உண்மை. உதாரணமாக உங்களை அப்படி நரகத்தில் நேரடியாகப் போட்டால் என்ன செய்வீர்கள்? எதற்காக என்னை தண்டிக்கிறாய்? நான் என்ன செய்தேன்? என்று கேட்பீர்களா இல்லையா?

கேள்வி: சரி, எதற்கு நரகம்? நாம் கஷ்டப்படுவதைப் பார்த்து ரசிப்பது அவன் விருப்பமா?

பதில்: அப்படிப்பட்டவனாக இருந்தால் அவன் அனைவரையும் நேரடியாக நரகத்துக்கு அனுப்பி இருப்பானே? அப்போதும் அவனை யாரும் எந்தக் கேள்வியும் கேட்க முடியாது.

## சொர்க்கத்தில் போட்டால் என்ன நஷ்டம்?

கேள்வி: சரி, நேரடியாக சொர்க்கத்தில் போட்டால் இறைவனுக்கு என்ன நஷ்டம்?

பதில்: அவன் நம்மை நரகத்தில் போட்டாலும் சொர்க்கத்தில் போட்டாலும் அவனைத் திருப்பிக் கேட்க முடியாது. நமக்கு விளக்கம் சொல்லிகொண்டிருக்க வேண்டிய அவசியமும் அவனுக்குக் கிடையாது.

ஆனால் இறைவன் மிகக் கருணையாளன். நம்மை- அதாவது முதல் மனிதரையும் அவரது மனைவியையும் - படைத்ததன் பின்னர் அவர்களை சொர்க்கத்தில்தான் குடியமர்த்தினான் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். பைபிளும் குர்ஆனும் அவ்வாறுதான் சொல்கின்றன. ஆனால் சொர்க்கத்தின் அருமையை அதன் விலைமதிப்பை உணராத அவர்கள் சில தவறுகளை செய்தார்கள். அதன் காரணமாக இறைவன் அவர்களை அங்கிருந்து வெளியேற்றினான்.

இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டிய விடயம் இதுதான்...

பசித்தவனுக்குத்தான் உணவின் அருமையும் தாகம் உள்ளவனுக்குத்தான் நீரின் அருமையும் தெரியும். வெயிலில் சென்று வந்தவனுக்குத் தான் நிழலின் அருமை தெரியும். எனவே சொர்க்கத்தை இலவசமாகக் கொடுக்காமல் அதை சிறிது கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்கும் பொருளாக அவன் ஆக்கிவிட்டான்.



## சொர்க்கத்தில் இருந்து வெளியேற்றம்

சொர்க்கத்தில் இறைவன் புசிக்க வேண்டாம் என்று தடுத்த கனியை ஷைத்தானின் தூண்டுதலால் புசித்த பின் தாங்கள் செய்த தவறை உணர்ந்தார்கள் நமது ஆதி தந்தையும் தாயும். பிறகு இறைவனிடம் பாவ மன்னிப்பு கோரினர். அதைத்தொடர்ந்து அவர்கள் இருவரும் இந்த பூமியின்மீது குடியேற்றப் பட்டார்கள்.

இறுதி இறைவேதம் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**2:37. (பாவ மன்னிப்புக்குரிய) சில வார்த்தைகளை இறைவனிடமிருந்து ஆதம் பெற்றுக் கொண்டார். எனவே அவரை இறைவன் மன்னித்தான் அவன் மன்னிப்பை ஏற்பவன் நிகரற்ற அன்புடையோன்.**

**7:24-25 ‘‘(இங்கிருந்து) இறங்கி விடுங்கள்! உங்களில் ஒருவர் மற்றவருக்குப் பகைவர்களாவீர். உங்களுக்குப் பூமியில் குறிப்பிட்ட காலம் வரை தங்குமிடமும், வசதியும் உள்ளன‘‘ என்று கூறினான். ‘‘அதிலேயே வாழ்வீர்கள்! அதிலேயே மரணிப்பீர்கள்! அதிலிருந்தே வெளிப்படுத்தப்படுவீர்கள்‘‘ என்றும் கூறினான்.**

**2:38. ‘‘இங்கிருந்து அனைவரும் இறங்கி விடுங்கள்! என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வரும் போது எனது நேர்வழியைப் பின்பற்றுவோருக்கு எந்த அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்‘‘ என்று கூறினோம்.**

**2:39. ‘‘(நம்மை) மறுத்து நமது வசனங்களைப் பொய்யெனக் கருதியோர் தாம் நரகவாசிகள். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்‘‘ (என்றும் கூறினோம்.)**

● இங்கு நேர்வழி என்பது இறைவனின் தூதர்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் நமக்கு வருகிறது. இந்த பரீட்சைக்களத்தில் வெறும் நேர்வழி மட்டும் இருந்து அதற்கு எதிரான ஒன்று இல்லாவிட்டால் அந்தப் பரீட்சையில் அர்த்தம் இருக்காது. அதனால்தான்

ஷைத்தான் என்ற ஒரு தீய சக்திக்கு இறைவன் அனுமதி கொடுத்து அவனுக்கு சில ஆற்றல்களையும் வழங்கி மனிதனை வழிகெடுக்க அனுமதியும் கொடுத்துள்ளான். யார் அவனைப் பின்பற்றுகிறார்களோ அவன் தூண்டும் சஞ்சலங்களுக்கு இரையாகின்றார்களோ அவர்கள் இந்தப் பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். மறுமையில் நரகத்தை அடைகிறார்கள்.

ஆக, இந்த பரீட்சைக் களத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவர் பரீட்சையை முடிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட கெடு நிச்சயிக்கப் பட்டுள்ளது. அநீதி, அக்கிரமங்கள் நடப்பதற்கும் இதுதான் இடம். அவற்றை எதிர்த்துப் போராட வாய்ப்பளிப்பதற்கும் இதுதான் இடம்! இங்கு இறைவன் அதர்மத்தை சிலவேளைகளில் நல்லோர்களின் கரங்கள் கொண்டு அழிக்கிறான். சிலவேளைகளில் தனது தண்டனைகளான இயற்கை சீற்றங்களைக் கொண்டு அழிக்கிறான். எதை எப்போது எப்படி அழிப்பது என்பது அவன் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

# நபிகளாரின் முதுகில் ஈச்சங்கயிற்றின் சுவடு!

உலகில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற மற்றும் வாழ்ந்து மறைந்த கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட மாமனிதர் நபிகள் நாயகம். அவர்களை இறைவிசுவாசிகளுக்கு ஒரு அழகிய முன்மாதிரி என்று இறைவன் சிறப்பித்துக் கூறுகிறான். அவர்கள் இவ்வுலக வாழ்வை எவ்வாறு எடுத்துக் கொண்டார்கள்? இதோ ஒரு உதாரணம்..

நபிகளாரின் நெருங்கிய தோழர் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை நபிகளாரின் இருப்பிடத்தில் சென்று சந்திக்க நேர்ந்தது. இஸ்லாம் கற்பிக்கும் வழக்கப்படி நபிகளாரின் அனுமதி பெற்று அவரது அறைக்குள் நுழைந்து முகமன் கூறினார்கள். அங்கே அவர் கண்ட காட்சியை உமர் அவர்கள் கூறுகிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஓர் ஈச்சம் பாயில் (அமர்ந்து) இருந்தார்கள். அவர்களுக்கும் அந்தப் பாய்க்கும் இடையே (விரிப்பு) எதுவும் இருக்கவில்லை. அவர்களுடைய தலைக்குக் கீழே ஈச்சம் நார்கள் நிரப்பப்பட்ட தோல் தலையணை ஒன்றிருந்தது.

அவர்களின் கால்களுக்கருகில் கருவேலை இலைகள் குவிக்கப்பட்டிருந்தன. அவர்களின் தலைமாட்டில் பதனிடப்படாத தோல் தொங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவர்களின் விலாப்புறத்தில் ஈச்சம்பாயின் சுவடு (பதிந்து) இருப்பதைக் கண்டு அழுது விட்டேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், ”ஏன் அழுகிறீர்கள் உமரே?““ என்றார்கள்.

அதற்கு நான், ”இறைத்தூதரே! (பைஸாந்திய மற்றும் பாரசீக மன்னர்களான) சீசரும் குஸ்ரூவும் (தாரளமான உலகச் செல்வங்களைப் பெற்று) வளமுடன் இருந்து வருகின்றனர். தாங்களோ இறைவனின் தூதராயிற்றே!“ என்றேன்.

அப்போது நபி (ஸல்) அவர்கள், ”அவர்களுக்கு இம்மையும் நமக்கு மறுமையும் இருப்பதை நீங்கள் விரும்பவில்லையா?“ என்று கேட்டார்கள். (நூல்: புகாரி)

# உலகமெனும் பரீட்சைக் கூடத்தின் இயல்புகள்

கீழ்கண்டவை இந்த உலகம் என்ற பரீட்சைக் கூடத்தின் இயல்புகள் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்:

**ஷைத்தான் என்ற பரீட்சை அங்கம்**

● இங்கு நேரான பாதையை மக்களுக்குக் காட்டித்தர இறைவன் தனது தூதர்களையும் தன் வேதங்களையும் அனுப்புகிறான். அதே நேரத்தில் இது ஒரு பரீட்சை என்ற காரணத்தால் இதில் ஷைத்தான் என்ற ஒரு கெட்ட சக்திக்கும் நம்மோடு வாழ அனுமதி வழங்கியுள்ளான்.

**இறைவன் தருவதே சட்டம்**

● இங்கு இறைவன் எதை செய் என்று சொல்கிறானோ அதுவே நன்மை அல்லது புண்ணியம் ஆகும். எதை செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே தீமை அல்லது பாவம் ஆகும். அவற்றை இறைவனின் வேதம் மூலமாகவும் தூதர் மூலமாகவும் அறிகிறோம்.

**நியாயமும் அநியாயமும் சகஜம்**

● இங்கு நல்லவையும் தீயவையும் நியாயமும் அநியாயமும் செல்வமும் வறுமையும் நம் முன் மாறிமாறி வரும். நல்லோர்களுக்குத் துன்பமும் கஷ்டமும் தீயோர்களுக்கு இன்பமும் மகிழ்ச்சியும் கிடைப்பதெல்லாம் இங்கு சகஜம். அவ்வாறு நன்மை செய்வதற்கும் தீமை செய்வதற்கும் அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்படும் இடமே இவ்வுலகம்.

**மேலும், சிறிதளவு அச்சத்தாலும், பசியாலும், உடைமைகள், உயிர்கள் மற்றும் விளைபொருட்கள் ஆகியவற்றில் இழப்பை ஏற்படுத்தியும் திண்ணமாக உங்களை நாம் சோதிப்போம். (இந்த நிலைகளில்) பொறுமையை மேற்கொள்கின்றவர்களுக்கு (நபியே!) நீர் நற்செய்தி கூறுவீராக! (திருக்குர்ஆன் 2:155)**

**யாருக்கு யாரும் வில்லனாக வருவார்**

● யார் எவ்வாறு வேண்டுமானாலும் எதைக்கொண்டு வேண்டுமானாலும் பரீட்சிக்கப்படலாம். அவற்றின் நியாயம் அநியாயம் என்பது நமது சிற்றறிவுக்கு எட்ட வேண்டும் என்பது இல்லை. நீர்க்குமிழிகள் போல் வாழ்ந்து மறையும் மனிதர்களின் தீர்ப்புக்காக இறைவன் காத்திருக்க வேண்டிய அவசியமும் அவனுக்கு இல்லை.

**பக்குவம் அறிந்தவன் அவனே!**

● இந்த பரீட்சையை எவ்வளவு பக்குவமாக நடத்துவது என்பதை மிக நுணுக்கமாக அறிந்தவன் இறைவன். அவனது அறிவுநுணுக்கமும் அளவிலா ஆற்றலும் நம்மைச்சுற்றி உள்ள படைப்பினங்களின் பக்குவமான அமைப்பிலும் அவற்றின் குறையற்ற இயக்கத்திலும் அது பிரதிபலிப்பதைக் காண்கிறோம். அற்பஜீவிகளான நம்முடைய சிற்றறிவுக்கு அறவே புலப்பட வாய்ப்பில்லை.

**அற்ப அறிவைக்கொண்டு இறை அறிவை எடைபோடுவது மடமை**

● அவன் எதுவரை அனுமதிக்கிறானோ மற்றும் எவற்றை நமக்கு அறிவித்துத் தருகிறானோ அவை மட்டுமே நமது அற்ப அறிவு என்பது. அதை வைத்துக்கொண்டு அந்த இறைவனின் அறிவையும் ஆற்றலையும் எடைபோடுவதும் அவனது திட்டத்தில் குறைகாண்பதும் மனிதனின்

அறியாமையின் வெளிப்பாடே! மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட அற்பமான தவணையில் தோன்றி மறையும் அற்பத்திலும் அற்பமான மனிதன் ஆதியும் அந்தமும் இல்லாதவனும் அளவிலா அறிவும் ஆற்றலும் கொண்டவனும் ஆன இறைவனுக்கு அவன் ஏற்பாட்டுக்கு மாற்று ஒன்றைப் பரிந்துரைப்பது அகங்காரத்தின் உச்சகட்டம் என்பதை நாம் உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு இறைவன்பால் திரும்பி அவனிடம் மனிதனின் செயல்பாடுகள் குறித்து விசாரணை உள்ளது. அன்று வருத்தப்படுவது மனிதனுக்கு பயனளிக்காது.

# இப்படியும் சோதனைகள் வருவதுண்டு!

அது மக்காவில் நபிகளார் இஸ்லாமிய பிரச்சாரம் செய்து அதன் விளைவாக நலிந்தவர்கள் பலரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு வாழும் காலமாக இருந்தது. அதனால் நாங்கள் மக்கா நகர் குறைஷிகளின் சித்திரவதைகளுக்கு ஆளாகி இருந்தோம்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கஅபாவின் நிழலில் தம் சால்வை ஒன்றைத் தலையணையாக வைத்துச் சாய்த்துக் கொண்டிருந்தபோது அவர்களிடம் நாங்கள் முறையிடுவதற்காக சென்றோம். (இஸ்லாத்தின் எதிரிகள் எங்களுக்கிழைக்கும் கொடுமைகளை) நாங்கள் முறையிட்டபடி "எங்களுக்காக இறைவனிடம் நீங்கள் உதவி கோரமாட்டீர்களா? எங்களுக்காகப் பிரார்த்திக்கமாட்டீர்களா?" என்று கேட்டோம்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள், "உங்களுக்கு முன்னிருந்தவர்களிடையே (ஓரிறைக் கொள்கையை ஏற்று இறைத்தூதரை நம்பிய) ஒருவர் பிடிக்கப்பட்டு, அவருக்காக மண்ணில் குழி தோண்டப்பட்டு, அவர் அதில் நிறுத்தப்படுவார். பின்னர் ரம்பம் கொண்டுவரப்பட்டு அவரின் தலையில் வைக்கப்பட்டு, அது இரண்டு பாதியாகப் பிளக்கப்படும. (பழுக்கக் காய்ச்சிய) இரும்புச் சீப்புகளால் அவர் (மேனி) கோதப்பட, அது அவரின் தசையையும் எலும்பையும் கடந்து சென்றுவிடும். ஆயினும் அ(ந்தக் கொடுமையான)து, அவரை (அவர் ஏற்றுக் கொண்ட) அவரின் மார்க்கத்திலிருந்து பிறழச் செய்யவில்லை".

நபிகளார் தொடர்ந்தார்கள்:

"அல்லாஹ்வின் மீதாணையாக! இந்த (இஸ்லாத்தின்) விவகாரம் முழுமைப்படுத்தப்படுவது உறுதி. எந்த அளவிற்கென்றால் வாகனத்தில் பயணம் செய்யும் ஒருவர் (யமனிலுள்ள) "ஸன்ஆவிலிருந்து "ஹள்ரமவ்த்" வரை பயணம் செல்வார். (வழியில்) அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் (வேறெவருக்கும்) அவர் அஞ்சமாட்டார். ஆயினும், (தோழர்களே!), நீங்கள் தாம் (கொடுமை தாளாமல் பொறுமை குன்றி) அவசரப்படுகின்றீர்கள்" என்றார்கள்.

அறிவிப்பு: கப்பாப் இப்னு அல்அரத்(ரலி) (புகாரி)

# சோதனைதான் வாழ்க்கை என்று புரிந்துகொள் மனமே!

இந்த உலகத்தின் பிரம்மாண்டத்தையும் இதில் மனிதனின் அற்பமான உருவத்தையும் நீர்க்குமிழி போன்ற அற்ப ஆயுளையும் பற்றி புரிந்து கொண்டவர்களைப் பொறுத்தவரையில் இவ்வுலக வாழ்க்கை என்பது இறைவனால் நடத்தப்படும் பரீட்சை என்பதை எளிதில் புரிந்து கொள்வார்கள். இப்பரீட்சையில் பலரும் பல்வேறு விதமாக சோதிக்கப்படுகிறார்கள்.

இறைவிசுவாசிகளைப் பொறுத்தவரையில் மறுமை வாழ்க்கையே நிலையானது என்பதை உறுதியாக நம்புகிறார்கள். அதனால் இம்மையில் அவர்கள் சோதனைகளின் போது பொறுமையோடும் நிதானத்தோடும் அவற்றை எதிர்கொள்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● ”இறைவன் மீது ஆணையாக! மறுமையை ஒப்பிடும் போது இவ்வுலகம் என்பது உங்களில் ஒருவர் தம் ஆட்காட்டி விரலைக் கடலில் நுழைப்பதைப் போன்றதாகும். பின்னர் (கடலிலிருந்து எடுக்கும் போது) அந்த விரல் எந்த அளவுக்கு (தண்ணீரை) எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைக் கவனிக்கட்டும்“



அறிவிப்பவர்: முஸ்தவரித் (ரலி) நூல்கள்: முஸ்லிம், திர்மிதீ , இப்னுமாஜா

## சோதனைகள் வாழ்க்கையின் நியதி

மறுமையில் காத்திருக்கும் அந்த சொர்க்கத்து இன்பங்களுக்காக கொடுக்கப்படும் விலையாக சோதனைகள் வருகின்றன என்பதைப் புரிந்து கொண்டு விசுவாசிகள் செயல்படுகிறார்கள்.

● **உங்களுக்கு முன் சென்றோருக்கு ஏற்பட்டது போல் உங்களுக்கும் ஏற்படாமல் சொர்க்கத்தில் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அவர்களுக்கு வறுமையும், துன்பமும் ஏற்பட்டன. அல்லாஹ்வின் உதவி எப்போது? என்று (இறைத்) தூதரும் அவருடன் உள்ள நம்பிக்கை கொண்டோரும் கூறுமளவுக்கு அலைக்கழிக்கப்பட்டனர். கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் உதவி அருகிலேயே உள்ளது. (திருக்குர்ஆன் 2:214)**

● **நம்பிக்கை கொண்டோம் என்று கூறியதன் காரணமாக சோதிக்கப்படாமல் விடப்படுவார்கள் என மனிதர்கள் நினைத்து விட்டார்களா? அவர்களுக்கு முன் சென்றோரையும் சோதித்தோம். உண்மை பேசுவோரை அல்லாஹ் அறிவான், பொய்யர்களையும் அறிவான். (திருக்குர்ஆன் 29:2,3)**

## கொள்கை உறுதிக்கு வலுசேர்க்கும் நம்பிக்கை

கொடுங்கோலர்களின் அடக்கு முறைக்கு ஆளானாலும் கொடிய பஞ்சம் பட்டினி பிணி போன்ற கொடுமைகளுக்கு ஆளானாலும் ஒரு விசுவாசியின் மனம் இறை உதவியையும் மறுமை இன்பத்தையும் நினைத்து அமைதி

*அடைகிறது.*

● **“ஒருபோதும் அல்லாஹ் விதித்ததைத் தவிர (வேறு ஒன்றும்) எங்களை அணுகாது அவன் தான் எங்களுடைய பாதுகாவலன்” என்று (நபியே!) நீர் கூறும் விசுவாசிகள் அல்லாஹ்வின் மீதே பூரண நம்பிக்கை வைப்பார்களாக! (திருக்குர்ஆன் 9:51)**

● **நிகழும் நிகழ்ச்சியெல்லாம் அல்லாஹ்வின் அனுமதி கொண்டேயல்லாமல் (வேறு) இல்லை. மேலும், எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ, அவருடைய இருதயத்தை அவன் நேர்வழியில் செலுத்துகிறான் - அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிந்தவன். (திருக்குர்ஆன் 64:11)**

● **எவரையும் அவரது சக்திக்குட்பட்டே தவிர அல்லாஹ் சிரமப்படுத்த மாட்டான். (திருக்குர்ஆன் 2:286)**

### நன்மையாக மாறும் சோதனைகள்

● *இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் “யாருக்கு இறைவன் நன்மையை நாடுகிறானோ அவரை (சத்திய) சோதனைக்கு உள்ளாக்குகிறான்.” என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். (புகாரி)*

● *ஒரு மனிதருக்கு நன்மை செய்ய இறைவன் நாடினால் இவ்வுலகிலேயே அவருக்குரிய தண்டனையை முன்கூட்டியே அளித்து விடுவான். ஒரு மனிதருக்கு இறைவன் தீமையை நாடினால் அவருடைய பாவங்களை நிலுவையில் வைத்து நியாயத் தீர்ப்பு நாளில் கணக்குத் தீர்ப்பான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக்(ரலி) (நூல்: திர்மிதீ)*

# கொடுங்கோல் அரசனுக்கு முன் துணிச்சல்

*தன்னைத்தானே கடவுள் என்று சொல்லிக் கொண்டு கொடுங்கோல் ஆட்சி புரிந்தவன் ஃபிர்அவ்ன். அவனது ஆட்சியில் அவனுக்குப் பணிபுரிந்த சூனியக்காரர்கள் ஃபிர்அவ்னின் கட்டளைப்படி இறைத்தூதர் மூஸா அவர்களோடு போட்டிக்கு வந்தார்கள். ஆனால் மூஸா (அலை) அவர்கள் செய்தது சூனியம் அல்ல, உண்மையான இறை அற்புதம் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொண்டார்கள். அப்போது அவர்கள் பிர்அவ்னின் கொடுமைகளுக்குப் பயப்படாமல் ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். பிர்அவ்ன் மிரட்டின். ஆயினும் உறுதியான இறைநம்பிக்கையோடு மிகத் துணிச்சலாக அவர்கள் கூறிய கூற்றைத் திருக்குர்ஆனில் நீங்கள் காணலாம்:*

**”எங்களிடம் வந்த தெளிவான சான்றுகளையும், எங்களைப் படைத்தவனையும் விட நாங்கள் உன்னைத் தேர்ந்தெடுக்கப் போவதில்லை. நீ கூற வேண்டிய தீர்ப்பைக் கூறிக் கொள்! இவ்வுலக வாழ்க்கையில் தான் நீ தீர்ப்பு வழங்குவாய். எங்கள் குற்றங்களையும், நீ எங்களைக் கட்டாயப்படுத்தி செய்ய வைத்த சூனியத்தையும் எங்கள் இறைவன் மன்னிப்பதற்காக எங்கள் இறைவனை நாங்கள் நம்பி விட்டோம். அல்லாஹ்வே சிறந்தவன் நிலையானவன்“““ (என்றும் கூறினர்.) (அல்குர்ஆன் 2072,73)**

# நபிகளாரை விரட்டிய பெண்மணி

ஒரு பெண்மணி தன் இறந்துபோன குழந்தையை புதைத்த பின்னர் அந்த சமாதிக்கருகே நின்று கொண்டு அழுது புலம்பிக்கொண்டு இருந்தார்.



அந்த வழியே கடந்து போய்க்கொண்டிருந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியைப் பார்த்து, “இறைவனை அஞ்சிக் கொள்! பொறுமையாக இரு!” என்றார்கள்.

அந்தப் பெண்மணியோ கடுகடுப்பாக, “எனக்கேற்பட்ட இத்துன்பம் உமக்கேற்பட வில்லை.. என்னைவிட்டு அகன்று செல்வீராக! “ என்று கூறினார்கள். நபிகள் நாயகத்தோடுதான் தான் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பது அவருக்குத் தெரியவில்லை.

நபிகள் நாயகமும் மக்களோடு மக்களாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். தான் ஒரு இறைத்தூதர் என்பதற்காக எந்தவிதமான சிறப்பு அடையாளத்தையும் அவர் அமைத்துக் கொண்டதில்லை. நாட்டின் ஆன்மீக மற்றும் அரசியல் தலைமை அவரிடம் இருந்தபோதும் அதை எப்போதும் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டதில்லை.

பிறகு அப்பெண்மணிக்கு சொல்லப்பட்டது நபிகள் நாயகத்தோடுதான் அவர் இவ்வாறு கடுகடுப்பாக நடந்து கொண்டார் என்பது.

செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அப்பெண்மணி நபிகள் நாயகம் அவர்கள் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். அங்கே காவலாளிகள் எவருமில்லை.

அப்பெண்மணி நடந்ததற்கு வருத்தம் தெரிவித்தார் . “நான் உங்களை யாரென அறியாமல் பேசிவிட்டேன்.” என்று நபி(ஸல்) அவர்களிடம் கூறினார்.

நபிகளாரும் வருத்தப்படக்கூடிய எதுவுமே நிகழவில்லை என்ற மட்டில் அப்பெண்மணியிடம் “அம்மா, பொறுமை என்பது துன்பம் ஏற்பட்டவுடன் கைக் கொள்வதே“ என்று கூறி சமாதானப் படுத்தினார்கள்.

(அறிவிப்பு: அனஸ் இப்னு மாலிக்(ரலி) நூல்: புகாரி)

**வாசகர் எண்ணம் :** நவம்பர் மாத இதழைப் பெற்றுக் கொண்டேன். “திருமூலர் வாசகங்களை உறுதிப்படுத்தும் இஸ்லாம்“ மற்றும் “தொழுகை ஏற்படுத்தும் மனமாற்றமும் குணமாற்றமும்“ போன்ற கட்டுரைகள் அருமை. இறைவன் உங்களுக்கு அருள் செய்வானாக.

- ஏசி பிரபாகரன் அல்சூர் பெங்களூர்

# முகநூல் (Facebook) கருத்துப் பரிமாற்றம்!




**Islamic Book House, Coimbatore (IBH)** *கோவை இஸ்லாமிய புத்தக நிலையத்தின்*

*முகநூல் பக்கத்தில் வந்த பதிவும் அதை ஒட்டிய கருத்துப் பரிமாற்றமும்..*

**பதிவு :** *மரித்தபின் மறுபடியும் உயிரோடு வருவோம் என்பதை நம்ப மறுப்பவர்களை பகுத்தறிவு கொண்டு சிந்திக்கச் சொல்லும் வசனங்களை நாம் திருக்குர்ஆனில் காணமுடிகிறது. இல்லாமையில் இருந்து அற்புதப் படைப்பாக நம்மை உருவாக்கிய அந்த வல்லவனே மீண்டும் உருவாக்குவான் என்கிறது குர்ஆன்!*

**”மனிதனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து நாமே நிச்சயமாகப் படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா? அவ்வாறிருந்தும், அவன் (நமக்கு) வெளிப்படையான தர்க்க வாதியாகி விடுகிறான்.**

**மேலும், அவன் தன் படைப்பை (தான் படைக்கப்பட்டதெப்படி என்பதை) மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான் “எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?“ என்று.**

**.“முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்“ என்று (நபியே!) நீர் கூறுவீராக!**

**பசுமையான மரத்திலிருந்து உங்களுக்காக நெருப்பை உண்டாக்குபவனும் அவனே் அதிலிருந்தே நீங்கள் (தீ) மூட்டுகிறீர்கள்.**

**வானங்களையும் பூமியையும் படைத்தவன், அவர்களைப் போன்றவர்களைப் படைக்கச் சக்தியற்றவனா? ஆம் (சக்தியுள்ளவனே!) மெய்யாகவே, அவனே (பல வகைகளையும்) படைப்பவன் யாவற்றையும் நன்கறிந்தவன்.**

**எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் “குன்“ (ஆய்விடுக) என்று கூறுவதுதான் உடனே அது ஆகிவிடுகிறது.” (திருக்குர்ஆன் 36:77-82)**

*மேலும் அறிய கீழுள்ள லிங்கை க்ளிக் செய்து படியுங்கள்:*

https://www.quranmalar.com/2012/11/blog-post_6.html

*மறுக்க முடியுமா மறுமை வாழ்வை?*

**இப்பதிவுக்கு வந்த கமெண்ட்:**

- **Siva Kumar** புளுகாதீங்க##

- **IBH:** சகோ, இது பொய் என்று நீங்கள் நினைத்தால் கீழ்கண்ட கேள்விகளுக்கு பகுத்தறிவு பூர்வமான பதில் தரவும்:

1. மனித இனம் இந்த பூமியில் தோன்றுவதற்கான பின்னணி என்ன?
2. மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன?
3. உங்கள் வாதத்திற்கு நீங்கள் முன்வைக்கும் ஆதாரம் என்ன?

- Siva Kumar ரொம்ப சிம்பிள்.

1.Big Bang theory.(பெருவெடிப்புக் கொள்கை)

2. மரம் , செடி , நாய் , சிங்கம் இதெல்லாம் எதற்கு வந்தது ? இவைகளின் வாழ்வின் நோக்கம் என்ன ? இதே கேள்விதான் மனிதனுக்கும் .

3 . டார்வின் ,கலிலியோ , ஐசக் நியூட்டன் , ஐன்ஸ்டீன் , பகவான் ஓஷோ

- **IBH**: அருமை சகோ. பிக் பேங்கில் இருந்து துவங்குவோம். நாம் இன்று வாழ்ந்துகொண்டு இருக்கும் பேரண்டத்தின் துவக்கம் அங்கிருந்துதான். அந்த நிலையில் பேரண்டம், ஒரு அணுவைவிடச் சிறிய புள்ளியாகச் சுருங்கி இருந்திருக்கிறது. பேரண்டம் சிறுபுள்ளியாகச் சுருங்கியிருந்த நிலையை “ஒருமை நிலை“ (Singularity) என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அவ்வாறு மிகமிகச்சிறியதொரு புள்ளியாக ஒடுங்கியிருந்த ஏதோவொன்று, ஒரு குறித்த கணத்தில் திடீரெனப் பிரமாண்டமாக வெடித்துச் சிதறியது. கோடானகோடி அணுகுண்டுகளை ஒன்றாய்ச் சேர்த்து வெடித்தது போல இருந்த அந்தப் பெருவெடிப்பைத்தான் “பிக்பாங்க்“ (Bigbang) என்கிறார்கள். வெடித்த அடுத்த நொடியிலேயே அது பேரண்டமாக விரிவடைந்தது. மிகச் சிறியதொரு புள்ளி ஒரு நொடிக்கும் குறைந்த நேரத்துக்குள் பேரண்டமாக விரிவடைந்தது. இதுவரை கூறியது உங்களுக்கு ஏற்புடையதா? கூறுங்கள் சகோ.

(நீண்ட நேரமாகியும் பதிலில்லை)

- **IBH**: மேற்படி கூற்று உண்மை என்றால் இதையும் பாருங்கள். பெருவெடிப்புக்கு முன் இன்று நாம் காணும் இந்த பிரபஞ்சத்தின் கரு உருவாகி இருக்கவேண்டும். அந்தக் கருவுக்குள் அதற்கான மென்பொருள் எழுதப்பட்டு இருக்கவேண்டும். உதாரணமாக ஒரு விதையையோ கடுகையோ எடுத்து நோட்டமிடுங்கள். அதற்குள் அடங்கியுள்ள மென்பொருளை - அதாவது அதில் அடங்கியுள்ள மூலப்பொருட்களின் இயல்புகளை செயல்பாடுகளை நடத்தையை அல்லது அதிலிருந்து முளைக்கப் போகும் தாவரத்தின் இலை, தண்டு, காம்பு போன்றவற்றின் இயல்புகள், நிறங்கள், வடிவங்கள், போன்ற விவரங்கள் அல்லது எவை எவை என்னென்ன விதத்தில் அளவையில் விகிதத்தில் இருக்கவேண்டும் என்னும் விவரங்களை எழுதப் பட்டுள்ளதை அறிவோம். அதே போல இந்த பிரபஞ்சத்தின் கருவிலும் எழுதப்பட்டு இருக்க வேண்டும். அல்லவா சகோ?

உங்கள் பதில்?

(பதிலில்லை)

● **IBH**: மட்டுமல்ல சகோ, அந்த பிக் பேங்கில் இருந்துதான் காலமும் வெளியும் உருவாகி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நான் மேலே குறிப்பிட்ட பிரபஞ்சத்தின் கருவும் கூட அதற்கு முன்வரை அங்கு இல்லை. அதாவது இல்லாமையில் இருந்து உள்ளமைக்கு வந்தது. இதை ஒப்புக் கொள்கிறீர்களா சகோ ?

(பதிலில்லை)

● **IBH**: மேலும் சகோ... இல்லாமையில் இருந்து உள்ளமைக்கு வந்த கருவுக்குள் அது எவ்வாறு இயங்க வேண்டும் எந்த வேகத்தில் விரிவடைய வேண்டும் என்னென்ன காலக்சிகள், கோளங்கள், மூலப்பொருட்கள், தனிமங்கள், அணுக்கள் உருவாக வேண்டும், அவற்றின் சேர்க்கை விகிதம்.... இப்படி என எண்ணற்ற பல தகவல்களையும் குறித்த மென்பொருளை திணித்தது யாராக இருக்கும் சகோ? பெருவெடிப்பின் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கம், இதற்கான சக்தி இன்ன பிற எண்ணிலடங்கா தேவைகள் இவற்றை சப்ளை செய்ததும் தொடர்ந்து செய்துகொண்டு இருப்பதும் யாராக இருக்கும் சகோ? அந்த தன்னிகரற்ற ஒப்புவமையில்லாத அந்த சக்தியையே தமிழில் கடவுள் என்றும், ஆங்கிலத்தில் காட் என்றும் அரபு மொழியில் அல்லாஹ் என்றும் அழைக்கிறோம் சகோ.

● **IBH**: பிக் பேங்கை நிகழ்த்திய அல்லாஹ்வே திருக்குர்ஆன் மூலம் உங்களோடு பேசுகிறான் என்ற உண்மை உங்களுக்கு தெரியுமா? **”நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் சத்தியமறுப்பாளர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா?’’ (திருக்குர்ஆன் 21:30)**

● **IBH** மேலும் பிக்பாங் பற்றிய விவரங்கள் அறிய இந்த லிங்கை சொடுக்குங்கள் https://www.quranmalar.com/2018/05/blog-post.html

● **IBH**: நாம் கூறும் உண்மைகள் பகுத்தறிவு பூர்வமானவை என்று நீங்கள் கருதினால் மேலே பதிவில் உள்ள லிங்கை க்ளிக் செய்து மறுமை வாழ்க்கையும் இறுதித் தீர்ப்பு நாளும் விசாரணையும் புளுகு அல்ல, உண்மை என்பதை உணருங்கள் சகோ. அதற்காக உங்களை தயார் செய்து கொள்ளுங்கள்

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

2. PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.

## வாட்சப் நற்செய்தி

தினமும் திருக்குர்ஆன் நற்செய்திகளை வாட்சப்பில் பெற 9886001357 என்ற எண்ணுக்கு கீழ்கண்டவாறு SMS செய்யுங்கள்:

**WHATSAPP TQNM**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 6382301984, 9600426150, 9994810734 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்: 7845033616 ராமநாதபுரம்: 7418140634 பாம்பன்: 9043758656 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262

## உலக வாழ்க்கை கண்டு மயங்காதீர்

● நன்கு அறிந்து கொள்ளுங்கள்: இந்த உலக வாழ்க்கை விளையாட்டும், கேளிக்கையும், வெளிப்பகட்டும் மற்றும் உங்களிடையே ஒருவருக்கொருவர் பெருமையடித்துக் கொள்ளுதல், செல்வங்கள், குழந்தைகள் ஆகியவற்றில் ஒருவரையொருவர் மிஞ்சிவிட முற்படுதலுமேயன்றி வேறில்லை. அதற்கான உவமை: மழை பொழிந்திடும்போது அதன்மூலம் விளைகின்ற தாவரங்களைப் பார்த்து விவசாயிகள் மகிழ்ச்சியடைவது போன்றதாகும். பின்னர், அதே பயிர் காய்ந்து விடுகின்றது. அது மஞ்சளித்துப் போவதையும், பின்னர், பதராகிவிடுவதையும் நீர் பார்க்கலாம். (இதற்கு மாறாக) மறுமை எத்தகைய இடமெனில், அங்கு கடும் தண்டனை இருக்கிறது. அல்லாஹ்வின் மன்னிப்பும் திருப்தியும் இருக்கின்றன. ஆனால், உலக வாழ்க்கை ஓர் ஏமாற்றுச் சாதனமே தவிர வேறெதுவுமில்லை.

(திருக்குர்ஆன் 57:20)

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

(PRINTED MATTER)

To

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................



அதற்கு இறைவன் கூறினான்: “நீங்கள் (பூமிக்கு) இறங்கிவிடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாவீர்கள். மேலும், ஒரு குறிப்பிட்ட காலம் வரை பூமியில் உங்களுக்குத் தங்குமிடமும் வாழ்க்கைச் சாதனங்களும் உள்ளன. அங்கேயே நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள் அங்கேயே நீங்கள் மரணமடைவீர்கள் (இறுதியாக விசாரணைக்காக) நீங்கள் அங்கிருந்தே எழுப்பப்படுவீர்கள்” (திருக்குர்ஆன் 7:24, 25)